பக்கங்கள் 19

# காலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 பங்குனி 06 புதன்கிழமை 20.03.2024 அதிர்வு 232

## பாதாளக் குழுக்களை ஒடுக்க 20 விசேட பொலிஸ் குழுக்கள்



பாதாள உலகக் குழுக்களை ஒடுக்குவதற்காக விசேட பயிற்சியளிக்கப்பட்ட 20 விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ்மா 04



## இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து

# யாழ். மாவட்ட மீனவர்கள் தொடர் உண்ணாவிரதம்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

**இந்திய மீனவர்களின் அத்து மீறிய செயற்பாட்டைக் கண்டித்து யாழ்ப்பாணம் மாவட்ட மீனவர்கள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.**

யாழ். மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனமும், யாழ். மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனமும் இணைந்து நேற்றுக் காலை முதல் யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத் துக்கு முன்பாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்றுக் காலை 9:30 மணிக்கு யாழ். மருதடி சந்தியில் இருந்து பேரணியாக யாழ். இந்தியத் துணைத் தூதரகம் நோக்கிச் சென்ற மீனவர்கள் துணைத் தூதரகம் முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பின்னர் அவர்களைப் பொலிஸார் அங்கிருந்து வெளியேற்றியதையடுத்து யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்துக்கு முன்பாக தமது உணவு தவிர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

## தமிழக - வடக்கு கடற்றொழிலாளர்களை கடலில் மோத வைக்கவே டக்ளஸ் முயற்சி

### சுரேஷ் பகிரங்கக் குற்றச்சாட்டு




(எஸ்.நிதர்ஷன்)

"தமிழக தமிழ் கடற்றொழிலாளர்களையும், வடக்கு தமிழ் கடற்றொழிலாளர்களையும் கடலில் மோத வைக்கவே குடியியல் தன்னார்வப் படையணி என்ற கடல் பாதுகாப்புப் படையணியைக் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உருவாக்க நினைக்கின்றார்." 04



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்றதாக அறிந்திருந்தேன்.

அது குறித்து நேற்று யாழ்ப்பாணம் நாளிதழில் தலைப்புச் செய்தி வந்திருந்தது.

"இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வழக்கு விவகாரத்தில் சுமுகமான தீர்வை எட்டுவதற்கு சுமந்திரன் - சிறீதரன் இணக்கம் 04

# ரூ. 2 கோடி பெறுமதியான 2 வலம்புரிச் சங்குகளை விற்க முயன்ற ஆலயக் குருக்கள் மட்டுநகரில் கைது



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நகரில் உள்ள இந்து ஆலயம் ஒன்றில் சட்ட விரோதமாக வலம்புரிச் சங்குகளின் வியாபாரத்தில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தில் குருக்கள் ஒருவரை சுமார் இரண்டு கோடி ரூபா பெறுமதியான இரண்டு வலம்புரிச் சங்குகளுடன் நேற்றுச் செவ்வாய்க்கிழமை ஆலையத்தில் வைத்து விசேட அதிரடிப்படையினர் கைது செய்து தங்களிம் ஒப்படைத்துள் ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லத்தீவு விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து விசேட அதிரடிப்படைத் தளபதி சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜயசுந்தரவின் ஆலோசனைக்கமைய முல்லைத்தீவு விசேட அதிரடிப்படை முகாம் பெறுப்பதிகாரி தலைமையிலனா குழுவினர் நேற்றுப் பகல் குறித்த ஆலயப் பகுதியில் கண்காணிப்பில் ஈடுபட்ட னர்.

இதன் போது வலம்புரிசங்குகளை விற்பனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அங்கு கடமையாற்றிவரும் குருக்கப்ஜ மடக்கிப்பிடித்து கைது செய்தமையுடன் சுமார் 2 கோடி ரூபா பெறுமதியான 2 வலம்புரிச் சங்குகளையும் மீட்டனர்.

இதில் கைது செய்யப்பட்ட 52 வயதுடைய குருக்களை கைப்பற்றப்பட்ட சான்றுப் பொருட்களுடன் தம்மிடம் ஒப்ப டைத்துள்ளனர் எனவும், இவரை நீதிமன்றில் ஆஜர்ப டுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரி வித்தனர்.

# திருக்கோணேஸ்வர ஆலய நிர்வாகத்துக்கு விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை நீக்கம்



(ஏ.எச்.ஹஸ்பர்)

திருகோணமலை திருக்கோணேஸ்வர ஆலய நிருவாகத் துக்கு எதிராகத் திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட இடைக்காலத் தடைக்கு திருகோணமலை மேன் முறையீட்டு குடியியல் நீதிமன்றம் தடை வழங்கியுள்ளது. இதனால் நிருவாக சபை தொடர்ந்து தடையின்றி இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

திருகோணேஸ்வரர் ஆலயத்தின் 2023ஆம் ஆண்டு தொடக்கம் 2026 ஆம் ஆண்டு வரைக்கான நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் தலைவர் சட்டத்தரணி திலகரட்ணம் துஷ்யந்தன் திருகோணமலையில் நேற்று மாலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போது இவ்விடயம் குறித்துத் தெரிவித் தவை வருமாறு:-

இன்றைய (நேற்றைய) தினம் திருகோணமலை மேன் முறையீட்டு குடியியல் நீதிமன்றில் நீதிமுறை மீளாய்வு மனு விசாரனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எமது நிருவாக சபைக்கு எதிரான இடைக்கால உத்தரவு தள்ளுபடி செய்யப்பட்டது. பதி லாக நியமிக்கப்பட்ட இடைக்கால நிருவாகத்துக்குத் தடை விதிக்கப்பட்டு எமது நிருவாகம் தொடர்ச்சியாக இயங்குவ தற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. எனவே எதிர்வரும் 24 ஆம் திகதி தொடக்கம் தொடர்ச்சியாக 18 நாள்களுக்கு மகோற் சவம் வெகு விமரிசையாக இடம் பெறும். - என்றார்.






# அநுரவைச் சந்தித்த ஜப்பான் தூதுவர் ஜனாதிபதித் தேர்தல் குறித்தும் பேச்சு

இலங்கைக்கான ஜப்பானின் தூதுவர் மியுகோஷி ஹிடெகிவுக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இடையிலான சந்திப்பு நெரூர் முற்பகல் மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை யகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது ஜப்பான் தூதரகத்தின் பதில் பிரதானி மற்றும் இரண்டாம்நிலை செயலாளர் ஆகியோரும், தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் விஜித ஹேரத்தும் இணைந்து கொண்டிருந்தனர்.

இலங்கையில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் நிலவரம் குறித்து இரு தரப்பும் விரிவாகக் கலந்துரையாடியதுடன், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் பற்றியும் கவனம் செலுத்தப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் இடையீடுகள் பற்றிய தேசிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு குறித்தும் ஜப்பானின் இராஜதந்திரப் பிரதிநிதிகளிடம் தெளிவுபடுத்தப்பட்டது.

எதிர்காலத்தில் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு ஜப்பான் தயாராகவுள்ளது என்று இதன்போது ஜப்பான் பிரதிநிதிகள் மூலமாக எடுத்துரைக்கப்பட்டது.





# பஸ் விபத்தில் 18 பேர் காயம்!

இ.போ.ச. பஸ் ஒன்று சுவரில் மோதி விபத்துக்குள்ளானதில் 18 பயணிகள் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டியிலிருந்து ஹொரவப் பொத்தான நோக்கிப் பயணித்த பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து தம்புள்ளை – நாவுல, உடதெனிய பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்றது.

மேற்படி விபத்தால் இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான பல மின் கம்பிகள், தொலைபேசிக் கம்பிகள் மற்றும் மதில் என்பன சேதமடைந்தன.

அதேவேளை, விபத்து இடம்பெற்ற வீதியின் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரகசியம் பரகசியம்...

எட்டியுள்ளனர். இதன் மூலம் அந்தக் கட்சிக்கு எதிரான வழக்கு விரைவாக நிறைவுக்கு வரும் என்று கருதப்படு கின்றது" - என அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்தச் செய்தியை வாசித்த போது 'அப்பாடா... பிரச்சினை ஒருவாறு முடிவுக்கு...' என்று ஒரு திருப்தி தோன்றியது.

செய்தி உண்மைதானா என்று அறிவதற்காக சுமந்திரனையே தொடர்பு கொண்டேன். நேற்று மதியத்துக்கு பின்னர்தான் அவரைப் பிடிக்க முடிந்தது. வழக்குகள், நாடாளுமன்ற அமர்வு என்று அவர் பிஸி போல.

செய்தி உண்மையா என்ற என் கேள்விக்கு அவர் நேரடியாகப் பதில் தரவில்லை.

கூட்டம் நடந்தது உண்மை என்று கூறிய அவர், கூட்டத்தில் பரிமாறப்பட்ட கருத்துக்களைப் பகிர்வது பொருத்த மற்றது என்று ஒரு வரியில் பதில் கூறி தவிர்த்துக் கொண்டார்.

"நீதிமன்றத்தில் நீங்கள் என்ன நிலைப்பாடு எடுப்பீர்கள்? கட்சியின் மற்றைய உறுப்பினர்கள் கூறியவற்றை நீங்களும் ஏற்றுக்கொண்டு அதை அங்கீகரிப்பீர்களா?" - என்று நேரடியாகவே கேட்டேன்.

"இப்போது சொல்ல முடியாது. நீதிமன்றத்தில் அதனைப் பார்க்கலாம். எனது சமர்ப்பணத்துக்காகத்தான் அத்திகதிக்கு - ஏப்ரல் 5க்கு - வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று வழக்குப் பதிவு கூறுகிறது. என் சார்பில் நானோ அல்லது எனது சட்டத்தரணியோ முன்னிலையாகி எங்கள் சமர்ப்பணங்களை முன்வைப்போம். அவ்வளவுதான் இதைப்பற்றி இப்போது கூறக் கூடியது....!" - என்று வெட்டினார் அவர்.

இதிலிருந்து ஒன்று தெரிகிறது - இந்த விடயத்தில் He wants to play his cards close to his chest - தன்னுடைய சீட்டுகளை பிறருக்கு காட்டாமல் தனது நெஞ்சுக்கு நெருக்கமாக வைத்து விளையாட அவர் முயலுகின்றார் என்பதுதான்.

மாவை சேனாதிராஜா, சி.வி.கே.சிவஞானம், குலநாயகம், சிறிதரன், கலையரசன், யோகேஸ்வரன், கே.வி.தவராஜா, துரைராஜசிங்கம், சத்திய லிங்கம் என மேலும் பலர் இக்கூட் டத்தில் பங்கு பற்றியமையால் அவர்கள் மூலம் விடயங்களைத் துருவ முயற் சித்தேன்.

சுமந்திரனைத் தவிர, வழக்கின் மற்றைய எதிராளிகள் அனைவரும் வழக்காளி பக்கத்துக் கோரிக்கைகளை முழுமையாக தாங்கள் ஏற்றுக்கொள்ளுகிறார்கள் என்று நீதிமன்றப் பதிவேட்டில் ஒப்பமும் வைத்துவிட்டு வந்த நிலையில், அவர்கள் தரப்பில் புதிய நிலைப்பாடு எடுக்க எதுவும் இல்லை, சுமந்திரன் எடுக்கப் போகும் நிலைப்பாடு என்ன என்பதை அவர்களாலும் சரியாக அளவிட முடியவில்லை என்பது அவர்களில் சிலருடன் பேசியதிலிருந்து புரிந்து கொண்டேன்.

எனினும் வழக்கு வைத்தவரின் எல்லாக் குற்றச்சாட்டுகளையும் ஏற்பதாக முழு சரணாகதி முடிவை நீதிமன்றத்தில் கட்சியினர் எடுத்தமை தவறு என்பதை தன் பங்குக்கு சுமந்திரன் ஞாயிறு கூட்டத்தில் விளங்கப் படுத்தி இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்த முடிந்தது. அதன் சாதக, பாதகங்களையும் அவர் விளக்கி இருக்கின்றார்.

"நான் வழக்கு விடயங்களைக் கட்சிப் பிரதிநிதிகளுடன் பேச முடியும். ஆனால் அந்த வழக்கில் ஒரு தரப்பினருக்காக முன்னிலையாகும் சட்டத்தரணி முன்னிலையில் அது குறித்து விரிவாகப் பேச முடியாது." - என்ற சாரப்பட சுமந்திரன் கூட்டத்தில் கூறியமையை அடுத்து சட்டத்தரணி கே.வி.தவராஜா, சுமந்திரனுடன் முரண்டு பிடித்து வாய் தர்க்கப்பட்டு பேசியபடி எழுந்து கூட்டத்திலிருந்து வெளியே சென்றார் என்று கூட்டத்தில் பங்கு பற்றிய நண்பர் ஒருவர் சொன்னார்.

இந்த லடாய் பற்றி விவரிப்பது என்றாலேயே பெரும் தொடர் எழுதலாம் போல. அவர்களின் வாக்குவாதம் குறித்து அவ்வளவு தகவல்களைத் திரட்ட முடிந்தது.

ஏனைய உறுப்பினர்கள் சிலருடன் பேசியதிலிருந்து ஒரு விடயம் தெளிவானது.

இனி, இந்த வழக்கில் மேற்கொண்டு என்ன செய்வது, எப்படி கையாள்வது என்பவை குறித்து முடிவு செய்வதற்கு, வழக்கையொட்டி சுமந்திரன் என்ன நிலைப்பாடு எடுக்கின்றார் என்பதைப் பார்த்திருப்பதை தவிர வேறு வழி மாவை தொட்டு ஏனைய அனைத்து உறுப்பினர்களுக்கும் இல்லை.

அதனால் சுமந்திரன் எப்படி நீதிமன்றத்தில் bat செய்யப் போகின்றார், என்ன நிலைப்பாடு எடுத்து விளையாடப் போகின்றார் என்று கட்சியில் எல்லோரும் பார்த்துக் காத்திருக்கின்றனர்.

பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்கும் மார்க்கம் ஒன்றை சுமந்திரன் எப்படியும் கண்டுபிடித்து காய் நகர்த்துவார் என்பதுதான் அவருடன் முரண்பட்ட தரப்பினரினதும் நிலைப்பாடாக - நம்பிக்கையாக - இருப்பதை உணரக் கூடியதாக இருந்தது.

ஆனால் சுமந்திரனோ தமது திட்டம், யோசனை, முடிவு குறித்து கோடி கட்டாமல் ஒளித்துப் பிடித்து விளையாடுகின்றார். ஏப்ரல் ஐந்தாம் திகதி வழக்கின் தவணை வரை பொறுத்து இருக்க வேண்டியதுதான்.

ஆனாலும், கட்சி பாதிக்கப்படாமல் இருப்பதை எப்படியும் சுமந்திரன் உறுதிப்படுத்துவார் என்று அவரை எதிர்க்கும் தரப்பினர் கூட இப்போது நம்புகிறார்கள் என்பதுதான் இதில் வேடிக்கை....!

## தமிழக...

– இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றஞ்சாட்டினார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவ்வாறு மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"வடக்குக் கடலில் தமிழகக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்கள் தொடர்ந்து காணப்படுகின்றன. வடக்கு கடற்றொழிலாளர்களின் வலைகள் அறுக்கப்பட்டு, அவர்களின் படகுகள் சேதமாக்கப்பட்டும் வருகின்றன.

தமிழகக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்கள் நிறுத்தப்பட வேண்டும். இந்தியாவில் கூட தடை செய்யப்பட்ட அடிமடி தொழிலை அவர்கள் இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து செய்கின்றனர்.

இதனைத் தடுக்க வேண்டிய கடமை கடற்றொழில் அமைச்சரின் கடமையாகும். அதனைத் தடுத்து நிறுத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அதற்காக குடியியல் தன்னார்வப் படையணி என்ற கடல் பாதுகாப்புப் படையணியை உருவாக்கவுள்ளதாகக் கடற்றொழில் அமைச்சர், அமைச்சரவைப் பாத்திரத்தைத் தாக்கல் செய்துள்ளார்.

அவ்வாறு கடல் பாதுகாப்புப் படையணியைக் கடற்றொழில் அமைச்சர் உருவாக்கிக் கடலில் தமிழகக் கடற்றொழிலாளர்களுடன் படையணியை மோத விடப் போகின்றாரா?

உருவாக்கப்படவுள்ள கடல் பாதுகாப்புப் படையணியில் தமிழர்களே உள்வாங்கப்படுவார்கள். குறிப்பாக வடக்கு கடற்றொழிலாளர்களே அதில் அதிகம் உள்வாங்கப்படுவார்கள். அவர்களைத் தமிழகக் கடற்றொழிலாளர்களுடன் நேரடியாக மோத விடப் போகின்றார்களா ?

இது இலங்கைக் கடற்படையை நல்லவர்களாக்கி, கடல் பாதுகாப்புப் படையணியைத் தமிழகக் கடற்றொழிலாளர்களுடன் மோத விடும் செயற்பாடு.

அதன் மூலம் இலங்கை அரசுக்கு எதிராகப் போராடும் தமிழக தமிழ் கடற்றொழிலாளர்களை, வடக்கு தமிழ் கடற்றொழிலாளர்களுக்கு எதிராகப் போராட வைக்கும் முயற்சியே இது.

இந்தப் படையணி உருவாக்கப்படுமாக இருந்தால், கடலில் தமிழக – வடக்கு தமிழ் கடற்றொழிலாளர்களுக்கு இடையில் மோதலை உருவாக்கும் முயற்சி என்றே கருதுகின்றோம்.

கடற்படை செய்ய வேண்டிய வேலைகளைக் கடல் பாதுகாப்புப் படையணியைச் செய்யத் தூண்டி பிரச்சினைகளை உருவாக்கக்கூடாது.

எனவே, அமைச்சரவைப் பத்திரத்தை உடனடியாகக் கடற்றொழில் அமைச்சர் மீளப் பெற வேண்டும். அதற்கு இங்குள்ள கடற்றொழில் சங்கங்கள் அமைச்சருக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்." – என்றார்.

## பாதாளக்...

அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.

பாதாள உலகக் குழுக்களை இம்மாத இறுதிக்குள் கட்டுப்படுத்தாவிட்டால், அடுத்த மாத இறுதிக்குள் போதைப் பொருள் மற்றும் பாதாள உலகக் குழுக்களை முற்றாக ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பம்பலப்பிட்டி பொலிஸ் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற பாதாள உலகக் குழுக்களை ஒடுக்குவதற்காக விசேட பயிற்சியளிக்கப்பட்ட 20 விசேட பொலிஸ் குழுக்களை ஸ்தாபிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

# தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வை அறிவிக்க துணிச்சலற்றவர் அனுரகுமார!

## ரெலோப் பிரமுகர் சபா குகதாஸ் குற்றச்சாட்டு

இலங்கையின் ஆட்சிப் பீடத்திற்கு வரத் துடிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸநாயக்க தேசிய இனப் பிரச்சினைக்கு தங்கள் கட்சி சார்பில் எவ்வாறான தீர்வை வழங்குவோம் என உறுதி பட கூறுவதற்கு துணிச்சல் அற்றவராகத் தன்னை வெளிப்படுத்தி உள்ளார் என முன்னாள் வட மாகாண சபையின் உறுப்பினரும், ரெலோ அமைப்பின் முக்கியஸ்தருமான சபா குகதாஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அண்மையில் கிளிநொச்சியில் நடந்த கருத்தரங்கில் அனுரகுமார தெரிவித்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே குகதாஸ் இவ்வாறு தெரிவித்தார்.

பௌத்த – சிங்கள மக்களைப் பகைத்துக் கொள்ளாமல், தமிழர்கள் தலையில் மிளகாய் அரைக்க நினைக்கிறார் அனுர. தமிழர்கள் கோரும் சமஷ்டித் தீர்வு தொடர்பில் பேசக் கூடாது எனக் கூறும் அனுர, தான் வழங்க நினைக்கும் தீர்வை வெளிப்படையாகக் கூற முதுகெலும்பு அற்றவராக இருக்கின்றார்.



அத்துடன் ஏனைய சிங்கள கட்சித் தலைவர்களை விடத் தான் தந்திரமாகத் தமிழர்களை ஏமாற்றி விடுவேன் என மனப்பால் குடிக்கிறார்.

தமிழர்களின் விடுதலைப் போராட்டத் தியாகம், அதன் அர்ப்பணிப்பு போன்றவற்றை கொச்சைப்படுத்தும் வகையில் அனுரகுமார தான் ஆட்சிக்கு வந்தால் மூன்று வேளை உணவை பெற்றுத்தருவார் என்ச்க்கிளிநொச்சியில் கூறியுள்ளார்.

மறுக்கப்பட்ட சுயநிர்ணய உரிமைக்காக போராடிய தமிழர்களின் 1952 ஆண்டு தேர்தல் வரலாற்றை படிக்கவில்லை அனுர. அன்றைய தேர்தல் கோசம் தமிழ் மக்களை நோக்கி சோறா? சுதந்திரமா? என்றவாறே இருந்தது. மக்களின் முழுமையான ஆதரவு சுதந்திரம் என்பதாகவே அமைந்தது.

அன்றில் இருந்து இன்று வரை பெரும்பண்மை வடக்கு கிழக்கு தமிழர்களின் நிலைப்பாடு உரிமைக் கானதாகவே புள்ளடி மூலம் காட்டப் பட்டது. இதனை அனுரகுமார புரிந்து கொள்ள வேண்டும்.

முள்ளிவாய்க்கால் இறுதிப் போரில் கிட்டத்தட்ட நான்கு மாதங்கள் உணவுப் பொருள்களை வன்னிக்குச் செல்ல விடாது ராஜபக்ஷ அரசாங்கம் தடுத்த போது, அவர்களுடன் இணைந்து துரோகம் இழைத்து விட்டு, இன்று அதே மக்களைப் பார்த்து மூன்று வேளை உணவை தருவோம் என கூறுவதற்கு பதவி ஆசை தானே காரணம்?

ஆகவே சிங்கள கட்சிகள் எல்லாமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான். இதற்கு ஜே.வி.பியும் விதிவிலக்கல்ல. – எனவும் அவர் கூறியுள்ளார்.




# மவுஸ்ஸாகலை, காசல்ரீ இரண்டிலும் வறட்சியால் நீர்மட்டம் குறைகின்றது

(செ.தி.பெருமாள்)

நீர் மின் நிலைய நீர்த்தேக்கங்கள் அமைந்துள்ள மத்திய மலைநாட்டு நீர் ஏந்து பகுதிகளில் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக நிலவி வரும் கடும் வறட்சியான காலநிலை காரணமாக மவுஸ்ஸாக்கலை மற்றும் காசல்ரீ நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வேகமாக வீழ்ச்சியடைந்து வருகின்றது.

தேசிய நீர்மின் சபைக்கு சொந்தமான மவுஸ்ஸாகலை மற்றும் காசல்ரீ நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் நேற்றுக் காலை 06.00 மணியளவில் முறையே 26 அடியாகவும் 24 அடியாகவும் இருந்ததாக நீர்த்தேக்கங்களுக்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவித்தனர்.

மவுஸ்ஸாக்கலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் வேகமாக வீழ்ச்சியடைந்து வருவதால், ஸ்ரீ சண்முநாதர் இந்து ஆலயத்தின் மேல் பகுதி, பழைய மஸ்கெலியா நகரத்தில் உள்ள மத வழிபாட்டுத் தலங்களுக்கிடையில், நீர்த்தேக்கத்தின் கீழ் இருந்த பகுதிகளை வெளியே காணக்கூடியதாக உள்ளது.

லக்ஷபான நீர் மின் நிலைய வளாகத்திற்கு சொந்தமான 06 மின் உற்பத்தி நிலையங்களான கெனியன், லக்ஷபான, நியூ லக்ஷபான, பொல்பிட்டிய, விமலசுரேந்திர மற்றும் பொட்லண்ட் ஆகியவற்றுக்கான மின் உற்பத்திக்கு மவுஸ்ஸாகலை மற்றும் காசல்ரீ ஆகிய இரண்டு நீர்த்தேக்கங்களிலிருந்தே நீர் விநியோகிக்கப்படுகிறது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## திருடனே தலையாரியானால்......

‘திருடனைத் தலையாரியாக்குதல்’ குறித்துப் பேசப்படுவதுண்டு. திருடன் தலையாரியானால் ஒன்றில் இன்னொரு கள்வன் களவு செய்யாமல் தடுப்பான். அல்லது தலையாரி பதவியை வைத்து மேலும் அதிகம் சுருட்டிக் கொள்வான். இதில் எந்த நோக்கத்திற்காக திருடனைத் தலையாரியாக்குகின்றார்கள் என்பதில் தான் விடயம் அடங்கியுள்ளது.

‘கோப்’ எனப்படும் பொது முயற்சியாண்மைக்கான நாடாளுமன்றத் தெரிவு குழுவில் இருந்து எதிரணி எம்.பிகள் ஏழு பேர்வரை பதவி விலகி இருக்கின்றமைக்கு இப்படித் தலையாரி நியமனம் பற்றிய சர்ச்சைதான் காரணம்.

அரசாங்கம் நிதிப்பங்கைக் கொண்டிருக்கும் பொதுக்கூட்டுத்தாபனங்கள், பகுதி அரசுடைமையான பிற நிறுவனங்கள் போன்றவற்றின் நிதிக் கையாளுகை விடயங்களில் ஒழுங்குமுறை சரிவரக் கடைபிடிக்கப்படுகின்றதா என்பதைக் கண்காணித்து உறுதி செய்யும் பணியே இந்த கோப் குழுவின் பிரதான பொறுப்பாகும்.

அரசு நிறுவனங்கள், பொதுக்கூட்டுத்தாபனங்களின் நிதிக் கையாளுகை தொடர்பான காவல் நாய்ப் பணி இந்த கோப் குழுவுக்கு உரியது.

வழமையாக இந்தக் குழுவின் தலைவர் பதவி எதிர்க்கட்சி உறுப்பினருக்கு வழங்கப்படுவதுதான் சம்பிரதாயம்.

நல்லாட்சி அரசின் காலத்தில் ஜே.வி.பி. உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி இதன் தலைவராக இருந்து செயற்பட்டார்.

அச்சமயத்தில், அதற்கு முந்திய ராஜபக்ஷ அரசில் இடம் பெற்ற பல ஊழல், முறைகேடுகள் பற்றிய விடயங்களை புள்ளிவிவரங்கள் மற்றும் கணக்குகளுடன் அம்பலப்படுத்தும் பணியை கோப் குழு கனகச்சிதமாக முன்னெடுத்தது.

ஆனால் நல்லாட்சியிடம் இருந்து அதிகாரம் கோட்டாபய ராஜபக்ஷவின் கைகளுக்கு மாறியதும், முன்னைய ராஜபக்ஷக்கள் ஆட்சிக்காலத்தின் ‘திருவிளையாடல்கள்’ பற்றிய விவரங்கள் வெளியே வராமல் மூடி மறைக்கும் எத்தனமாகக் கோப் குழுவின் தலைமை வழமைக்கு மாறாக அரசுத் தரப்புக்கு கையளிக்கப்பட்டது.

இந்த வரிசையில் சரித்த ஹேரத், பேராசிரியர் ரஞ்சித் பண்டார போன்றோருக்கு இந்தத் தலைமைப் பதவி வழங்கப்பட்ட போது அதனால் சர்ச்சை உருவெடுத்தது.

புதிய நாடாளுமன்ற அமர்வு ஆரம்பமானதும், நாடாளுமன்றக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் பதவிகளில் மாற்றம் இடம்பெறும் போது, கோப் குழுவின் தலைவராக ரோஹித அபேகுணவர்தனவை - ராஜபக்ஷக்களுக்கு மிக நெருக்கமான கையாளை - கோப் குழுவின் தலைவராக அறிவித்திருக்கிறார் சபாநாயகர். அதுவே இப்போது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கின்றது.

ஏற்கனவே ராஜபக்ஷக்கள் கால ஊழல், முறைகேடுகள் போன்ற சிக்கல்களில் மாட்டியிருந்தவர் ரோஹித அபேகுணவர்தன.

கோப் தலைவர் பதவிக்கான அவரின் நியமனத்தை ‘தலையாரி பதவிக்கு திருடனை நியமித்த’ கதையாகக் கருதிச் சீறி எழுந்திருக்கின்றன எதிர்க்கட்சிகள். அதனால் கோப் குழுவின் உறுப்புரிமையிலிருந்து அதன் 27 உறுப்பினர்களில் எதிர்க்கட்சியினர் ஏழு பேர் ஏற்கனவே விலகிவிட்டனர். அக்குழுவில் இருந்து எதிரணியினரின் விலகல் மேலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளை இடைநிறுத்தி விட்டு, இப்படி வழமை மற்றும் சம்பிரதாயங்களுக்கு மாறாக, ஆளும் தரப்புக்கு இந்தப் பதவியை வழங்கியிருக்கின்றார் சபாநாயகர். அதன் மூலம் ஊழல், மோசடிகளை மூடி மறைக்கும் செயற்பாடுகளுக்கு சபாநாயகரும் துணை போயிருக்கின்றார் என்று குற்றம் சுமத்தும் எதிர்கட்சிகள், சபாநாயகருக்கு எதிராகத் தற்போது சமர்ப்பிக்கப்பட்டு, நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு வரும் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் இவ்விடயத்தை ஓர் அம்சமாகச் சுட்டிக் காட்டி உள்ளமையும் கவனிக்கத் தக்கது.

தயாசிறி ஜெயசேகர எம்.பி. கூறுகின்றமை போல -

‘அறகலய’ போராட்டம் மூலம் மக்கள் வெளிப்படுத்தியுள்ள செய்தியை - அவர்களின் நேர்மையான எதிர்பார்ப்பை - அரசும் சபாநாயகரும் புரிந்து கொள்ளவில்லை என்றே தோன்றுகின்றது. அதனைத்தான் கோப் குழுவின் தலைவர் பதவி நியமனம் நிரூபித்திருக்கின்றது. - என்ற கூற்று சரியாகத்தான் இருக்கின்றது.




# அன்னை பூபதியின் நினைவு மாதம் அவர் சமாதியில் ஆம்பித்து வைப்பு

(கனகராசா சரவணன்)

எதிர்வரும் ஏப்பிரல் 19 ஆம் திகதி தியாக தீபம் அன்னை பூபதியின் 36ஆவது ஆண்டு நினைவேந்தலை யிட்டு தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி அன்னை பூபதி மாதத்தை நேற்று செவ்வாய்கிழமை மட்டக்களப்பு நாவலடியில் அமைக்கப்பட்டுள்ள அவரின் சமாதிக்கு மலர் மாலை அணிவித்து, மாலர் தூவி, சுடர் ஏற்றி, அஞ்சலி செலுத்தி ஆரம்பித்தனர்.

கடந்த 1988 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினரை வெளியேறுமாறு கோரி 8 அம்ச கோரிக்கைகளை முன் வைத்து அன்னை பூபதியம்மா மட்டு மாமாங்கேஸ்வர ஆலைய முன்றிலில்



மார்ச் 19ஆம் திகதி உண்ணா விரத போராட்டத்தில் தொடர்சியாக ஈடுபட்டு ஏப்பில் 19ஆம் திகதி உயிர் நீத்தார்.

இந்த தியாக தீபம் அன்னை பூபதியம்மா உண்ணாவிரதம் ஆரம்பித்த திகதியான மார்ச் 19ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 19ஆம் திகதிவ்வரை அன்னை பூபதி மாதமாக பிரகடனப்படுத் தப்பட்டது. இதனடிப்படையில் அன்னை பூபதி மாதத்தையிட்டு தமிழ் தேசிய மக்கள் முன்னணிக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் த.சுரேஸ் தலைமையில் கட்சி உறுப்பினர்கள் நேற்று அன்னை யின் சமாதிக்குச் சென்று சாமாதி யிலுள்ள அவரது உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி சுடர் ஏற்றி 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தியதையடுத்து அன்னை பூபதி மாதத்தை ஆரம்பித்து வைத் தனர்






# அன்னை பூபதிக்கு யாழிலும் அஞ்சலி

உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த அன்னை பூபதியின் உண்ணாவிரதம் ஆரம்பித்த 36 ஆவது நினைவு தினம் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அலுவலகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்திய அமைதிப்படைகள் புரிந்த அட்டூழியத்திற்கு எதிராக அகிம்சை வழியில் இதே நாள் 1988ஆம் ஆண்டு மட்டக்களப்பில் உண்ணா நோன்பைத் தொடங்கி ஏப்ரல் 19 ஆம் திகதி அவர் உயிர்த் தியாகம் செய்தார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணி மற்றும் மாவட்ட அமைப் பாளர்கள் உறுப்பினர்கள் கலந்து கொண்டு அன்னை பூபதியில் திரு வுருவப் படத்துக்கு மலர் தூவி, மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி னர்.

இதன்போது அன்னை பூபதியின் தியாகம், தற்போது உள்ள அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பில் மகளிர் அணியின் செயல்பாட்டாளர் கருத்து தெரிவித்தார்.



(படங்கள்:- எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

# இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து யாழ். மாவட்ட மீனவர்கள் தொடர் உண்ணாவிரதம்











# ஒன்பது நாள்களாக மூடிக்கிடக்கின்றது திருக்கோவில் ஆதார வைத்தியசாலை!

## இன்று ஆளுநர் தலைமையில் திருமலையில் கூட்டம்

( வி.ரி. சகாதேவராஜா)

கடந்த ஒன்பது நாள்களாகத் திருக்கோவில் ஆதார வைத்தியசாலை வைத்தியர்களின் பணிப் பகிஷ்கரிப்பால் மூடிக்கிடக்கின்றது.

இதனால் அந்த பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 32 ஆயிரம் தமிழ் மக்கள் வைத்திய சேவையின்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவசர சிகிச்சைகளுக்காக அப்பிரதேச மக்கள் அக்கரைப்பற்று வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டிய துர்பாக்கிய நிலையில் உள்ளனர்.

இது தொடர்பாக திருக்கோவில் ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் மர்சூத்திடம் தொடர்பு கொண்டு நிலைமையைக் கேட்டபோது –

வைத்தியசாலை செயற்பாடுகள் இன்னும் வழமைக்கு திரும்பவில்லை. நேற்று (19 செவ்வாய்க்கிழமை) கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு செயலாளர், கிழக்கு மாகாண பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் உள்ளிட்ட குழுவினரின் கலந்துரையாடல் கூட்டம் இங்கு நடைபெறவிருந்தது. அதன் பின்னர் முடிவுகள் தெரியவரும் என்றார்.




இதேவேளை, நேற்று முன்தினம் திங்கட்கிழமை திருக்கோவில் பிரதேச செயலகத்திற்கு காணி உரிமைப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வுக்கு வருகை தந்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினரும், பிரதேச செயலாளரும் வைத்தியசாலை மூடப்பட்டுக் கிடப்பது தொடர்பாகவும் அது திறக்கப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பாகவும் தெரிவித்தனர்.

அதற்கு, அவர் இன்று புதன்கிழமை திருகோணமலையில் இது தொடர்பான கூட்டம் இடம்பெறும் என்று தெரிவித்துள்ளார்.

இதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் மற்றும் சம்பந்தப்பட்ட சகலரையும் அவர் அழைத்துள்ளார்.

அதன்படி இன்று புதன்கிழமை திருமலையில் நடைபெறும் கூட்டத்துக்குப் பின்னர் வைத்தியசாலை திறப்பு தொடர்பாக அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாகாண சபைத் தேர்தல் பிற்போடப்பட்டமைக்கு சுமந்திரன் எம்.பி. பொறுப்புக் கூற வேண்டுமாம்!

## நீதியமைச்சர் நாடாளுமன்றத்தில் குற்றச்சாட்டு

"மாகாண சபைத் தேர்தல் முறைமை திருத்த விவகாரத்தில் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எம்.ஏ.சுமந்திரன் கடும் அழுத்தம் பிரயோகித்தார். மாகாண சபை தேர்தல் பிற்போடப்பட்டு மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டுள்ளமைக்கு எம்.ஏ.சுமந்திரன் பொறுப்புக் கூற வேண்டும்."

– இவ்வாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் சபையில் உரையாற்றுகிறாரா அல்லது பிரதேச சபையில் உரையாற்றுகிறாரா ? என்பதை அறியவில்லை. உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தை சுட்டிக்காட்டி உரையாற்றினார். அவரது உரையில் விரக்தி மாத்திரமே எதிரொலித்தன.

அரசமைப்பின் 21 ஆவது திருத்தம் தொடர்பில் இவர் சபையில் உரையாற்றுகையில் 'உயர்நீதிமன்றம் வீட்டுக்கு செல்ல வேண்டும்' என்று இவர் குறிப்பிட்டார். இவர்களுக்கு சார்பான தீர்ப்பு கிடைக்கும் போது சபைக்கு வந்து உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அப்பாற்பட்டு செல்ல கூடாது என்று குறிப்பிடுகிறார். ஏன் இந்த இரட்டை நிலைப்பாடு?



மாகாண சபைத் தேர்தல் முறைமை திருத்தம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழுத்தம் பிரயோகித்தார். இதனால் மாகாண சபைத் தேர்தல் பிற்போடப்பட்டு மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டுள்ளது. இதற்கு எம்.ஏ.சுமந்திரன் பொறுப்புக் கூற வேண்டும். ஆகவே நீங்கள் தான் (சுமந்திரன்) அப்போதைய பிரதமருக்கு கடும் அழுத்தம் பிரயோகித்தீர்கள்."

– என்றார்.

இதன்போது எழுந்து ஒழுங்கு பிரச்சினையை எழுப்பிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் 'உயர்நீதிமன்றத்தின் குறை நிறைகளைச் சுட்டிக்காட்டும் உரிமை எமக்கு உண்டு. அன்று குறிப்பிட்ட விடயத்துக்கும், இன்று குறிப்பிடும் விடயத்துக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடுகள் உண்டு. நான் அன்று குறிப்பிட்ட கருத்தில் எவ்வித மாறுப்பாடும் கிடையாது. மாகாண சபைத் தேர்தல் முறைமை திருத்தம் தொடர்பில் உயர்நீதிமன்றம் முன்வைத்த திருத்தங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை. சிறந்த சட்ட வரைவை நாங்கள் தயார் செய்து முன்வைத்தோம், உயர்நீதிமன்றத்தின் திருத்தங்கள் சட்டத்தில் உள்வாங்கப்படவில்லை, நல்லாட்சி அரசாங்கத்தின் இந்த செயற்பாடுகளுக்கு நான் எதிர்ப்பு தெரிவித்தேன்.

"அத்தருணத்தில் நான் எதிர்க்கட்சியில்தான் இருந்தேன். நீங்கள்தான் அமைச்சரவையில் இருந்தீர்கள். மாகாணத் தேர்தல் நடைபெறாமல் இருப்பதற்கு நீங்கள்தான் பொறுப்பேற்க வேண்டும். நான் சாதாரண எதிர்க்கட்சி உறுப்பினர் மாத்திரமே." என்றார்.



# ஆரோக்கியத் துவாய் தொடர்பான பெண்களின் சுகாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்குங்கள்!

## நாடாளுமன்றில் எதிர்க்கட்சித் தலைவர் மன்றாட்டம்

"என்னை நீங்கள் 'பேட் மேன்' என்று கூறினாலும் பரவாயில்லை. பெண்களின் ஆரோக்கியத் துவாய் தொடர்பான சுகாதாரப் பிரச்சினைக்கு நிலையான தீர்வை இப்போதேனும் வழங்குங்கள்."

– இவ்வாறு அரசைப் பார்த்து வெளிப்படையாகக் கோரியிருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

பெண்களின் ஆரோக்கியத் துவாய் சுகாதாரம், சமூக ஆரோக்கியம் குறித்த கலந்துரையாடல் மிகவும் உயர் மட்டத்தில் இருந்து வருகின்றன. எமது நாட்டின் சனத்தொகையில், 11 மில்லியன் பெண்கள் ஆவர். அவர்களில் சுமார் 2.5 மில்லியன் பேர் மாதாந்த நிதி செயல்முறையை எதிர்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இறக்குமதி செய்யப்படும் ஆரோக்கியத் துவாய் மீதான அதிக வரி, உள்நாட்டில் தயாரிக்கப்படும் ஆரோக்கியத் துவாய் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருள்களின் மீதான வரி என்பன அதிகரிக்கப்பட்டுள்ளமையால், இவை விலையுயர்ந்த ஆடம்பரப் பொருளாக மாற்றியுள்ளன என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஒரு குடும்பத்தின் மாத வருமானத்தில் சுமார் 3.5 வீதம் ஆரோக்கியத் துவாய்களுக்காக செலவிடப்படுகிறது. ஆரோக்கியத் துவாய்களின் விலைகள் அதிகம் என்பதால், குறைந்தபட்ச வாழ்க்கைத் தரம் உள்ள குடும்பங்களில் உள்ள பெண்கள் ஆரோக்கியமற்ற முறைகளை இதற்காக பயன்படுத்துகின்றனர். அதனை நிறுத்தி, பொருளாதார வறுமையை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறான மோசமான சுகாதார பயன்பாட்டினால் சிறுநீரக தொற்று மற்றும் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் நிலைமைகள் ஏற்படுகின்றன எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

இறக்குமதி செய்யப்படும் ஆரோக்கியத் துவாய்களுக்கு அதிக வரி விதிக்கப்பட்டதால் அவற்றின் விலை அதிகரித்துள்ளது. ஆரோக்கியத் துவாய்களுக்கு விதிக்கப்பட்ட வரியை நீக்குவது எப்போது?

பெண்களுக்கு இலவச ஆரோக்கியத் துவாய் வழங்குவதை ஐக்கிய மக்கள் சக்தி கொள்கையாகக் கருதினாலும், தற்போதைய அரசாங்கம், 2019 ஜனாதிபதித் தேர்தலின் போது அதனை கேலி செய்து, நற்பெயருக்கு கலங்கம் விளைவித்து,சேறு பூசும் விதமாக பேசினாலும் இன்று அது பாரியதொரு பிரச்சினையாக மாறியிருக்கிறது. எனவே இதற்குத் தீர்வு வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.நிலையியற் கட்டளை 27(2)இன் கீழ் ஆரோக்கியத் துவாய் விவகாரம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று கேள்வி எழுப்பும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பான பாடங்கள் தடை செய்யப்பட்டவையாக இனிமேலும் இருக்கக்கூடாது. சமூகத்தில் இது தொடர்பான ஓர் உரையாடலை உருவாக்க வேண்டும். கல்விப் பாடத்திட்டத்திலும் இவ்விவகாரம் உள்ளடக்கப்பட வேண்டும். சமூகத்திலும் இது குறித்த விடயதானங்களை பேசுபொருளாக்க வேண்டும். இது ஒரு மனிதாபிமானப் பிரச்சினை என்பதால், இது குறித்து வெளிப்படையாகப் பேசி, நிலையான தீர்வைக் காண வேண்டும். அபிவிருத்தியடைந்த முற்போக்கு சமூகங்கள் இவ்வாறான பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வுகளைக் கொண்டிருந்தாலும் வளர்முக நாடிகளிலுள்ள சமூகங்கள் இவ்வாறான பிரச்சினைகளுக்கு முட்டாள்தனமான தீர்வுகளை முன்வைத்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் இங்கு தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்படும் ஆரோக்கியத் துவாய்களுக்கு 40 வீத வரி செலுத்த வேண்டியுள்ளது. VAT,PAL, SSCL மற்றும் Cess போன்ற 4 வரிகள் உள்ளன. 15 முதல் 49 வயதுடைய பெண்கள் எதிர்கொள்ளும் இந்தப் பிரச்சினைக்கு உகந்த தீர்வு வழங்கப்பட வேண்டும். Selyn அறக்கட்டளை இந்த பிரச்சினைக்கு ஒரு சிறந்த ஆய்வை முன்னெடுத்து ஒரு நிலையான தீர்வையும் எட்டியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

# சஜித் பிரேமதாஸ தரப்புக் கோரிக்கையை நிராகரித்தது கொழும்பு மாவட்ட நீதிமன்றம்

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை ஐக்கிய மக்கள் சக்தியில் வகிக்கும் பதவிகளிலிருந்து நீக்குவதற்கு விதிக்கப்பட்ட தடை உத்தரவை தளர்த்துமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ விடுத்த கோரிக்கையை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

இதன்படி, இந்த தடை உத்தரவை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி வரை நீடிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சரத் பொன்சேகா தாக்கல் செய்த முறைப்பாட்டை பரிசீலித்த கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இந்தத் தடை உத்தரவை முன்னர்பிறப்பித்திருந்தது.




# கல்வி அமைச்சுடன் மைக்ரோசொவ்ட் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைசாத்து

தரம் 08 இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கான தகவல் தொழில்நுட்பப் பாடத்தில் செயற்கை நுண்ணறிவு விடயப்பரப்பை உள்வாங்குவதற்கான முன்னோடித் திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கல்வி அமைச்சுக்கும் மைக்ரோசொவ்ட் நிறுவனத்திற்கும் இடையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் கைசாத்திடப்பட்டது.

20 மாவட்டங்களில் 20 பாடசாலைகளைத் தெரிவு செய்து தரம் 8 இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கான இந்த முன்னோடித் திட்டத்தை செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கு அவசியமான நவீன வகுப்பறைகளையும் தொழில்நுட்ப உபகரணங்களையும் வழங்குவதாக இங்கு குறிப்பிடப்பட்டது.

அதன்படி கல்விச் செயற்பாடுகளை தொழில்நுட்ப முறையில் முன்னெடுப்பதற்கான உதவிகளை மைக்ரோசொவ்ட் நிறுவனத்தின் குழுவொன்று வழங்கவுள்ளது.

இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைசாத்திடும் முன்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் மைக்ரோசொவ்ட் நிறுவனத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்றும் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது, பாடசாலை பாடத்திட்டத்தில் செயற்கை நுண்ணறிவை உள்வாங்குவதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக ஜனாதிபதியிடம், மைக்ரோசொவ்ட் பிரதிநிதிகள் உறுதியளித்தனர்.

மைக்ரோசொவ்ட் நிறுவனத்தின் இந்தியா மற்றும் தெற்காசிய பிராந்திய தலைவர் புனித் சந்தோக், புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய செயற்கை நுண்ணறிவை இலங்கையில் அறிமுகப்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கும் ஆதரவிற்கும் வழிகாட்டலுக்கும் பாராட்டு தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டத்தை 2025 ஆம் ஆண்டிலிருந்து முழுமையாக நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த சுட்டிக்காட்டினார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சாங், இலங்கை மக்களுக்கு இது ஒரு சிறந்த சந்தர்ப்பம் என்றும் அதனால்,அனைவரும் முழுமையான பயனடைய வேண்டியது அவசியமெனவும் வலியுறுத்தினார்.


மேலும், இலங்கை மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களின் ஆங்கில மொழித் திறனை மேம்படுத்துவதற்கு சுயாதீன குழுக்களின் ஆதரவை பெற்றுத்தருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, கல்வி அமைச்சின் செயலாளர் வசந்த பெரேரா, தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் தர்மசிறி குமாரதுங்க மற்றும் மைக்ரோசொவ்ட் நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் குழு, கொழும்பு டி.எஸ் சேனநாயக்க கல்லூரி, முஸ்லிம் பெண்கள் பாடசாலை, புஸ்ஸல்லாவ இந்து தேசிய பாடசாலை, தங்கல்ல பெண்கள் கல்லூரி, கொழும்பு இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.









# கிழக்கின் முழுமையான அபிவிருத்தியின் மூலம் நாட்டின் கடன் நெருக்கடியைத் தீர்க்க முடியும்!

## கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவிப்பு



“ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்ட அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வருகின்றோம். கிழக்கு மாகாணத்தை முழுமையாக அபிவிருத்தி செய்வதன் மூலம் நாட்டின் கடன் நெருக்கடியைத் தீர்க்க முடியும்.”

– இவ்வாறு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்.

”ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரையின் பேரில், நாம் கிழக்கு மகாணத்தில் தற்போது பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். முப்பது வருட யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மாகாணம் என்பதால் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் கிழக்கு மாகாணம் வளர்ச்சியில் பின்னடைவைச் சந்தித்துள்ளது. எனவே இந்த மாகாணத்திற்குரிய மூன்று மாவட்டங்களினதும் வளர்ச்சியில் அதிக கவனம் எடுக்குமாறு ஜனாதிபதி எனக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதற்காக கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் உள்ள வளங்கள் தொடர்பில் நாம் தற்போது கண்டறிந்துள்ளோம். உதாரணமாக இறால் வளர்ப்பு, கனிய வளங்கள், துறைமுகம், விமான நிலையம், நீர் வளம், சுற்றுலாத் துறை மற்றும் விவசாய நிலங்கள் போன்றவற்றை எவ்வாறு நாம் அபிவிருத்தி செய்வது என்பது குறித்து அவதானம் செலுத்தியுள்ளோம். எனவே இவற்றை மேம்படுத்துவதன் மூலம் எமது நாட்டின் கடன்களை அடைப்பதற்கு கிழக்கு மாகாணம் மாத்திரம் போதுமானது என்பதைக் கூற வேண்டும்.

அந்தளவு வளங்கள் கிழக்கு மாகாணத்தில் இருக்கின்றன. அவற்றை முறையாக அபிவிருத்தி செய்ய வேண்டும். எதிர்காலத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் கடனைத் திருப்பி செலுத்தும்போது கிழக்கு மாகாணம் அதற்கு நிதிப் பங்களிப்பை வழங்க முடியும் என்று நான் நினைக்கின்றேன்.

எதிர்காலத்தில் முழு நாட்டுக்கும் பொருளாதார பங்களிப்பை வழங்கும் முதல் மாகாணமாக கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பேரில் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

மேலும் மலையக மக்களின் சம்பளப் பிரச்சினையைப் பொறுத்தவரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெருந்தோட்ட மக்களுக்கு நியாயமான சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார். அதற்காக பெருந்தோட்டக் கம்பனிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படுகின்றன.

பொதுவாக இரண்டு வருடங்களில் சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும். ஏற்கனவே ஒரு வருடம் தாமதமாகி உள்ளது. இதற்காக நாம் சம்பள நிர்ணய சபைக்கு சென்றுள்ளோம். தற்போது பெருந்தோட்டக் கொம்பனிகள் அவற்றின் முன்மொழிவுகளை வழங்கியுள்ளன. பெருந்தோட்டத் தொழில் என்பது அந்நியச் செலாவணியுடன் தொடர்புபட்டது. எனவே டொலரின் பெறுமதி அதிகரிப்பிற்கு ஏற்பவும் உள்நாட்டு வாழ்க்கை செலவினைப் பொறுத்துமே சம்பளம் தீர்மானிக்கப்பட வேண்டும். விரைவில் மலையக மக்களுக்கு நல்ல சம்பளம் கிடைக்கும் என நாம் நம்புகின்றோம்.

எமது நாடு முகங்கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு தற்போது இருக்கும் ஒருவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே. அவர் அதனை செய்தும் காட்டியுள்ளார். எரிபொருள் இல்லை, மின்சாரம் இல்லை, உணவு இல்லை, மருந்துகள் இல்லை என அன்று இருந்த அதே அரசாங்கத்தை நடத்திச் செல்ல முடியாது என அனைவரும் கைவிரித்தபோது, அதே அரசாங்கத்தை எடுத்து அதனைத் தற்போதைய ஜனாதிபதி செய்து காட்டியுள்ளார்.

எதிர்காலத்தில் யார் ஜனாதிபதியாக வந்தாலும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை மாற்ற முடியாது. தற்போதுள்ள வரி விதிப்புகள் அனைத்தும் ஜனாதிபதி விரும்பி ஏற்படுத்தியவை அல்ல. மாறாக சர்வதேச நாணய நிதியம் எமது நாடு பொருளாதார ரீதியில் மீண்டு வருவதற்காக இட்ட நிபந்தனைகளாகும்.

நாம் விரைவில் சர்வதேச நாணய நிதியத்தின் கடனைத் திருப்பிச் செலுத்திவிட்டு அதில் இருந்து வெளியே வர வேண்டும் என்பதற்காகவே பல்வேறு வேலைத் திட்டங்களை ஜனாதிபதி முன்னெடுத்து வருகின்றார். ஏனைய நாடுகள் நாம் எவ்வாறு ஒரு குறுகிய காலத்தில் பொருளாதார ரீதியில் மீண்டு வந்தோம் என்பதை ஆராய்கின்றன. பல்வேறு நாடுகள் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு கிடைத்தும் இன்னும் மீட்சி பெறாமல் இருக்கின்றன. ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைத்து சில மாதங்களிலேயே எமது நாட்டை மீட்டெடுத்து விட்டார். பிரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப்பட்டு விட்டன என நான் கூறவில்லை.

ஆனால், இன்னும் ஒரு வருடத்திற்குள் எமது நாட்டை பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கே முயற்சி எடுத்து வருகின்றார். ஜனாதிபதி பதவி என்றால் என்ன என்பதையே தெரியாத ஒருவருக்கு நாட்டைப் பொறுப்பளித்தால், அதனைப் பற்றி அறிந்துகொள்ளவே அவர்களுக்கு இரண்டு, மூன்று வருடங்களாகும். அதற்குள் மீண்டும் ஒரு பொருளாதார வீழ்ச்சியை நோக்கி எமது நாடு சென்றுவிடும் வாய்ப்பு உள்ளது.

நாம் ஏற்கனவே பல தேர்தல்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக செயற்பட்டவர்கள். ஆனாலும் தற்போது அவரைத் தவிர வேறு எவரும் இந்த நாட்டை மீட்டெடுக்கக் கூடியவர் இல்லை. எனவே நாம் தற்போதுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து அவருக்கு ஒத்துழைப்பு வழங்குவதே சிறந்த தீர்வாக இருக்க முடியும்.” – என்றார்.







## வெடுக்குநாறி மலையில் கைது செய்யப்பட்ட தங்களின்

# விடுதலைக்குக் குரல் கொடுத்த சகலருக்கும் விடுதலையான எண்மரும் நன்றி தெரிவிப்பு!

(கே.வசந்தன்)

வெடுக்கு நாறி மலையில் கைது செய்யப்பட்டு விடுதலையான 8 பேரும் விடுதலைக்காக குரல் கொடுத்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துள்ளனர்.

வவுனியா வடக்கு வெடுக்குநாறி மலையில் சிவராத்திரி வழிபாட்டின் போது ஆலய பூகசர் உள்ளிட்ட 8 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டு, நேற்று அவர்கள் மீதான வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

விடுவிக்கப்பட்டதும் 8 பேரும் நீதிமன்ற வளாகத்தில் இருந்து வெளியே வந்த போது அவர்களது உறவினர்கள், மனைவிமார், பிள்ளைகள் அவர்களைக் கட்டி ஆரத்தழுவி கண்ணீர் மல்கி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இதன்போபது கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்களும், கைதாகி விடுதலையானவர்களும் விடுதலைக்காக குரல் கொடுத்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தனர்.

இது தொடர்பில் கைதாகி விடுதலையான எஸ்.தவபாலசிங்கம் ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த போது –

வெடுக்குநாறி மலையில் சிவராத்திரி வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது மிகவும் அநீதியான முறையில் நாம் கைது செய்யப்பட்டிருந்தோம். பொலிஸார் வேண்டும் என்றே எம் மீது பொய் வழக்குப் போட்டு 12 நாள்கள் விளக்கமறியலில் இருந்து விடுதலையாகியுள்ளோம். பொலிஸாரினால் முன்வைக்கப்பட்ட குற்றசாட்டுகள் எவையும் நிரூபிக்கப்படவில்லை. எங்களுடைய விடுதலைக்காக பல உறவுகள் தொடர்ச்சியாக குரல் கொடுத்துள்ளார்கள். மதத்தலைவர்கள், அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், புலம்பெயர் உறவுகள் எனப் பலரும் குரல் கொடுத்திருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக சட்டத்தரணிகள் எம–க்காக போராடி இருந்தார்கள். வவுனியாவிலும், நெடுங்கேணியிலும் பெரியளவிலான போராட்டம் நடைபெற்றது. அதில் பலரும் பங்குபற்றி எமக்காக குரல் கொடுத்திருந்தார்கள். எமக்காக குரல் கொடுத்த அனைத்து உறவுகளுக்கும் நன்றிகள். வெடுக்குநாறி மலை எங்களது சொத்து. அதை நாம் தொடர்ந்து ஒன்றுபட்டு பாதுகாக்க வேண்டும். – எனவும் தெரிவித்தார்.













# காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திக்கு நிதியுதவி வழங்குவதற்கு இந்தியா இணக்கம்



காங்கேசன்துறை துறைமுகத்தை முழுமையாக அபிவிருத்தி செய்வதற்கு 61.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்க இந்திய அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் துறைமுகங்கள், கப்பல்துறை, விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இடையிலான சந்திப்பொன்று அமைச்சில் அண்மையில் இடம்பெற்ற போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பாரிய அளவிலான கப்பல்கள் மற்றும் படகுகள் உள்நுழைவதற்கு ஏற்ற வகையில் துறைமுகம் 30 மீட்டர் ஆழப்படுத்தப்படவுள்ளதுடன், புதிய அலைதாங்கியை நிர்மாணிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் இந்தியா இடையிலான ஒத்துழைப்பை விரிவுபடுத்தவும் அதிக அளவிலான இந்திய சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைத்துவரவும் இந்தியா முழுமையான ஒத்துழைப்பை வழங்குமென இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா இதன்போது தெரிவித்துள்ளார்.

இந்திய சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக 600 மில்லியன் ரூபா செலவில் காங்கேசன்துறை துறைமுகத்தில் புதிய பயணிகள் முனையம் நிர்மாணிக்கப்பட்டதாகவும் கடந்த 9 மாதங்களில் பாரிய அளவிலான சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர் எனவும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, இந்தியா வழங்கவுள்ள 61.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை பயன்படுத்தி, காங்கேசன்துறை துறைமுகத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரிடம் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# அரபிக்கடலுக்குச் செல்ல வேண்டாமென மீன்பிடித் திணைக்களத்தால் அறிவுறுத்தல்



அரபிக்கடலில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என மீனவர்களுக்கு மீன்பிடித் திணைக்களத்தினால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சோமாலிய கடற்கொள்ளையர்களின் படகுகளைக் கடத்தும் செயற்பாட்டை கருத்திற்கொண்டு இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

சோமாலிய கடல் வலயத்தில் இருந்து 700 கடல் மைல் தொலைவில் கிழக்கு திசையில் சர்வதேச கடற்பரப்பில் மிகவும் அபாயமான நிலை காணப்படுவதாக இலங்கைக் கடற்படை அறிவித்துள்ளதாக திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலைமையை கருத்திற்கொண்டு நீண்டநாள் மீன்பிடிப் படகுகள் இயலுமான வரை தற்போது பெயரிடப்பட்டுள்ள அபாய வலயத்தைத் தவிர்த்து அரபிக்கடலின் கிழக்கு பிராந்தியத்தில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு மீன்பிடித் திணைக்களத்தினால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

# நாடாளுமன்றத் தேர்தல் முறைமை மாற்றத்துக்கான அரசமைப்புத் திருத்தத்துக்கு அமைச்சரவை அனுமதி

## சட்டமூலத்தைத் தயாரிக்கப் பச்சைக் கொடி காட்டப்பட்டது

நாடாளுமன்ற தேர்தல் முறைமையை மாற்றுவதற்கான அரசமைப்புத் திருத்தத்தை மேற்கொள்வதற்கான சட்டமூலத்தை தயாரிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ இந்த யோசனையை அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளார்.

இதற்காக நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து கட்சித் தலைவர்கள் மற்றும் ஏனைய தரப்பினரின் கருத்துகளைக் கேட்டறிந்த பின்னர் அமைச்சரவைக்கு பரிந்துரைகளை முன்வைப்பதற்காக அமைச்சரவை உபகுழுவொன்றும் நியமிக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 160 பேரை தொகுதிவாரி முறையில் குறித்த தேர்தல் தொகுதிகளில் உள்ள வாக்காளர்களின் ஊடாக நேரடியாக தேர்ந்தெடுப்பதற்கும், எஞ்சிய 65 பேரை விகிதாசார முறையில் தேசிய ரீதியில் அல்லது மாகாண ரீதியில் தேர்ந்தெடுக்கவும் பெரும்பான்மையானோர் அந்த குழுவிற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதமரின் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவினால் முன்வைக்கப்படும் பரிந்துரைகளைக் கருத்திற்கொண்டு இதனை சட்டமூலமாக்குவதற்காக சட்டவரைஞர்களுக்கு ஆலோசனை வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

# ரோஹித்த அபேகுணவர்தனவின் நியமனம் நாடாளுமன்றை மலினப்படுத்தும் செயற்பாடு

## நளின் பண்டார எம்.பி. சபையில் குற்றச்சாட்டு

"ஆளும் தரப்பின் உறுப்பினர் ரோஹித்த அபேகுணவர்தனவை கோப் குழுவின் தலைவராக நியமித்து நாடாளுமன்றத்தை மலினப்படுத்தும் செயற்பாட்டை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. இந்தத் தவறு திருத்தம் செய்யப்பட வேண்டும். ரோஹித அபேகுணவர்தனவை பதவி நீக்கி தலைவர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்க வேண்டும்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"கோப் குழுவின் உறுப்பினர் என்ற வகையில் இந்த வலியுறுத்தலை அரசாங்கத்திடம் முன்வைக்கிறேன். நாடாளுமன்ற குழுக்களில் கோப் குழு முக்கியமானது. கோப் குழுவின் தலைவர் கணக்காளர் நாயகத்துடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். கோப் குழுவின் தலைவராக ஆளும் தரப்பினர் ரோஹித்த அபேகுணவர்தன நியமிக்கப்பட்டுள்ளமைக்கு பலர் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார்கள். கோப் குழுவின் உறுப்பினர் பதவியில் இருந்து எரான் விக்கிரமரத்ன விலகியுள்ளார்.

கோப் குழுவின் தலைவர் நியமனத்தில் இவ்வாறான முரண்பாடுகள் காணப்படுகின்ற நிலையில் அதிகாரிகள்



எவ்வாறு குழுவில் முன்னிலையாகுவார்கள்? கோப் குழுவின் தலைவராக ரோஹித்த அபேகுணவர்தனவை நியமித்து நாடாளுமன்றத்தை மலினப்படுத்தும் செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

தவறை அரசாங்கம் திருத்திக் கொள்ள வேண்டும். ஆகவே ரோஹித்த அபேகுணவர்தனை தலைவர் பதவியிலிருந்து நீக்கி நாடாளுமன்ற சம்பிரதாயங்களுக்கு அமைய கோப் குழுவின் தலைவர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்க வேண்டும் என்று அரசாங்கத்திடம் வலியுறுத்துகிறேன்." – என்றார்.

# கோப் குழுவிலிருந்து 7 எம்.பிக்கள் விலகல்

கோப் எனப்படும் பொது முயற்சியாண்மைக்கான நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இருந்து ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராஜினாமாச் செய்துள்ளனர்.

அந்தக் குழுவின் புதிய தலைவராக ரோஹித அபேகுணவர்தன நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே அவர்கள் தமது பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளனர்.

கோப் குழுவிலிருந்து ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன நேற்று முன்தினம் விலகியிருந்த நிலையில், அந்தக் குழுவில் அங்கம் வகித்த மேலும் அறுவர் நேற்று பதவிகளை இராஜிநாமா செய்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, சரித்த ஹேரத், சாணக்கியன் , ஹேஷா விதானகே, காமினி வலேபோட மற்றும் எஸ்.எம். மரிக்கார் ஆகியோர் கோப் குழுவின் பதவிகளிலிருந்து தாம் விலகுகின்றனர் என நேற்று அறிவித்தனர்.

"கோப் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ரோஹித அபேகுணவர்தனவுக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு மத்தியில் என்னால் தொடர்ந்து அந்தக் குழுவில் பணியாற்ற முடியாது. "அறகலய" மக்கள் போராட்டத்திலிருந்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாடம் கற்றுக்கொள்ளவும், மக்களை மதிக்கவும் தவறியுள்ளமை துரதிஷ்டவசமான விடயமாகும். ஊழலை ஒழிக்க நாடாளுமன்ற குழுக்களும் ஊழலற்றதாக இருக்க வேண்டும்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தனது இராஜிநாமாக் குறித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

# சேலம் பா.ஜ.க. பொதுக்கூட்டத்தில் கூட்டணி தலைவர்கள் ஓ.பி.எஸ், ஜி.கே. வாசன், ராமதாஸ், சரத்குமார் பங்கேற்பு




சேலத்தில் பிரதமர் மோடி கலந்து கொண்ட பா.ஜ.க. பிரச்சாரப் பொதுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது.

தமிழகத்தில் மக்களவைத் தேர்தல் ஏப்ரல் 19 ஆம் திகதி ஒரே கட்டமாக நடக்கவுள்ளது. இதையடுத்து அரசியல் கட்சித் தலைவர்கள் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பா.ஜ.க. சார்பில் சேலம் கெஜல் நாயக்கன்பட்டியில் நேற்று பிரச்சார பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் பிரதமர் மோடி கலந்துகொண்டார். இதற்காக நேற்று மதியம் 12.30 மணிக்கு கேரளாவில் இருந்து ஹெலிகொப்டர் மூலம் கெஜல் நாயக்கன்பட்டி பொதுக்கூட்ட மைதானத்துக்கு வந்தார்.

அவருக்கு பா.ஜ.க. சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. மைதானத்தில் இருந்து திறந்த வான் மூலம் மேடைக்கு அழைத்து வரப்பட்டார்.

இந்தக் கூட்டத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்ற தலைவர்கள் பங்கேற்றுள்ளனர். பா.ம.க. நிறுவனர் ராமதாஸ், தலைவர் அன்புமணி ராமதாஸ், அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன், ஓ.பி.எஸ், ஜி.கே. வாசன், சரத்குமார், குஷ்பு, வானதி ஸ்ரீனிவாசன் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர். அப்போது கூட்டத்தில் ராமதாஸுக்கு கைகுலுக்கி வரவேற்றார் பிரதமர் மோடி. பின்னர் பிரதமர் மோடிக்கு கூட்டணி கட்சித் தலைவர்கள் சால்வை அணிவித்தனர்.

# மோடியின் நல்லாட்சி தொடரவே பா.ஜ.கவுடன் பாமக கூட்டணி

## அன்புமணி விளக்கம்



பிரதமர் நரேந்திர மோடியின் நல்லாட்சி தொடரவும், தமிழ்நாட்டில் மாற்றங்கள் வருவதற்காகவும் பா.ஜ.கவுடன் கூட்டணி முடிவை எடுத்துள்ளதாக பா.ம.க. தலைவர் அன்புமணி தெரிவித்துள்ளார்.

திண்டிவனம் தைலாபுரம் தோட்டத்தில் நேற்று பாமக நிறுவனர் ராமதாஸ், தலைவர் அன்புமணி, பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை, மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் முன்னிலையில் பா.ஜ.க. – பா.ம.க. இடையிலான கூட்டணி ஒப்பந்தம் கையெழுத்தானது. இதில் பாமகவுக்கு மொத்தம் 10 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அன்புமணி ராமதாஸ்,

"10 ஆண்டுகாலமாக பாட்டாளி மக்கள் கட்சி டில்லியில் தேசிய ஜனநாயக கூட்டணியின் அங்கமாக இருந்து வருகிறது. எதிர்வரும் மக்களவை தேர்தலை தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியுடன் இணைந்து சந்திக்க கட்சி முடிவு செய்திருக்கிறது. பிரதமர் நரேந்திர மோடியின் நல்லாட்சி தொடரவும், தமிழ்நாட்டில் மாற்றங்கள் வருவதற்காகவும் நாங்கள் இந்த முடிவை எடுத்துள்ளோம். 60 ஆண்டுகளாக தமிழகத்தை ஆட்சி செய்து கொண்டிருப்பவர்கள் மீது மக்களுக்கு வெறுப்பான சூழல் இருக்கிறது. ஒரு மாற்றம் வரவேண்டும் என்ற எண்ணம் மக்கள் மனதில் ஆழமாக இருக்கிறது. அதை பூர்த்தி செய்யவே இந்த முடிவை நாங்கள் எடுத்துள்ளோம்.

எங்கள் கூட்டணி, தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், இந்தியா முழுக்க மிகப்பெரிய வெற்றி பெறும். பிரதமர் மோடி மூன்றாவது முறையாக இந்தியாவின் பிரதமராக நிச்சயமாக தேர்ந்தெடுக்கப்படுவார்." – என்றார்.

## வி.சி.க. வேட்பாளர்கள் அறிவிப்பு:

# சிதம்பரத்தில் திருமாவளவன், விழுப்புரத்தில் ரவிக்குமார் போட்டி



விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் சிதம்பரம் தொகுதியில் திருமாவளவன் மற்றும் விழுப்புரம் தொகுதியில் ரவிக்குமார் ஆகியோர் மீண்டும் போட்டியிடவுள்ளனர். இரு தொகுதிகளிலும் பானை சின்னத்தில் போட்டியிடுவதாக அக்கட்சியின் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

"வரவிருக்கும் மக்களவைத் தேர்தலில் ரவிக்குமார் இரண்டாவது முறையாக விழுப்புரத்தில் போட்டியிடுகிறார். நான் ஆறாவது முறையாக சிதம்பரத்தில் போட்டியிடுகிறேன். அகில இந்திய அளவில் இண்டியா கூட்டணிக்கு ஆதரவு பெருகி வருகிறது. குறிப்பாக ராகுல் காந்தி மேற்கொண்ட இரண்டு கட்டப்பயணம் இந்த நாட்டை பாசிச சக்திகளிடமிருந்து காப்பாற்றுவதற்கான பயணம். இதனை நாட்டு மக்கள் உணர தொடங்கி இருக்கிறார்கள்." – என்றார்.

# காசாவில் போர் நிறுத்தத்தை வலியுறுத்துகிறார் அமெரிக்க இராஜாங்க செயலாளர் பிளிங்கன்

காசாவில் போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான பேச்சுக்களை முன்னெடுப்பதற்காக அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்ரனி பிளிங்கன், சவுதி அரேபியா மற்றும் எகிப்துக்கு இந்த வாரம் உத்தியோகப்பூர்வ பயணத்தை மேற் கொள்ளவுள்ளார்.

தற்போது பிலிப்பைன்ஸில் உள்ள பிளிங்கன், சவுதி அரேபிய அதிகாரி களை எதிர்வரும் புதன்கிழமை சந்திக் கவுள்ளார்.

இதனை தொடர்ந்து, எகிப்திய அதி காரிகளுடன் எதிர்வரும் வெள்ளிக் கிழமை அவர் பேச்சுக்களை முன்னெ டுக்கவுள்ளார்.





இதேவேளை, காசாவில் உள்ள அனைவரும் மனிதாபிமான தேவைக ளுடன் இருகின்றனர் என சுட்டிக்காட் டப்பட்டுள்ளது.

இந்த நிலையை கருத்தில் கொண்டு, மத்திய கிழக்கு நாடுகளுக்கான பயணத் தின் போது போர் நிறுத்தம் மற்றும் காசாவுக்கான மனிதாபிமான உதவிகள் அதிகளவில் வழங்கப்படுவதை உறுதி செய்வது தொடர்பான பேச்சுக்களை அன்ரனி பிளிங்கன் முன்னெடுக்கவுள் ளார்.

அத்துடன், பலஸ்தீனிய இராணுவத் தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பணயக்கைதிகளை விடுவிப்பது தொடர்பிலும் பேச்சுவார்த்தைகள் நடத் தப்படவுள்ளன என கூறப்பட்டுள்ளது.

# புதிய தேசிய பாதுகாப்பு சட்டமூலம் ஹொங்கொங் நாடாளுமன்றில் நிறைவேற்றம்!





புதிய தேசிய பாதுகாப்பு சட்டமூலத்தை ஹொங்கொங் நாடாளுமன்றம் நேற்று நிறைவேற்றியுள்ளது.

இந்த சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டு, 15 நாள்களுக்குள் அது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

சீனாவின் சிறப்பு அந்தஸ்த்தை கொண்ட பகுதியென கூறப்படும் ஹொங்கொங்கின் சுதந்திரத்துக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களை கருத்திற் கொண்டு இந்த சட்டம் இயற்றப் பட்டுள்ளதாக விமர்சகர்கள் தெரிவிக் கின்றனர்.

இந்த சட்டத்தினூடாக தேசத்துரோகம், சதிகள், அரச இரகசியங்களை திருடுதல் மற்றும் உளவு பார்த்தல் போன்றவற் றுக்கு ஆயுள் தண்டனை வரை தண் டனை அளிப்பதற்கு அனுமதிக்கப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரவுள்ள தாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித் துள்ளன.

# விளாடிமிர் புட்டினுக்கு சீன ஜனாதிபதி வாழ்த்து

சீன ஜனாதிபதி சீ ஜின்பிங் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் விளாடிமிர் புட்டின் வெற்றி பெற்றதை அடுத்து, சீனா ஜனாதிபதி இவ்வாறு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் இருநாடுகளுக்கும் இடையிலான உறவை மேலும் மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிறைவடைந்த ரஷ்ய ஜனாதிபதித் தேர்தலில் விளாடிமிர் புட்டின் 87.8 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# இன்றைய ராசி பலன்கள் - 20.03.2024




இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும்.உரையாடலின் போது கவனமாக இருங்கள்.பயணங்கள்செய்ய வாய்ப்புள்ளது.

பணியிடத்தில் சிறப்பான பலன்களைக் காணலாம்.உங்களின் சிறிய முயற்சிகள் பெரும் வெற்றியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் சில பயனுள்ள விஷயங்களைப் பேசுவீர்கள். என்றாலும் பேச்சு ஆக்கபூர்வமாக இருக்கும் வகையிலும் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்கும் வகையிலும் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று கணிசமான தொகை உங்களிடம் காணப்படும். உங்கள் குடும்பத்தோடு பயணம் செல்ல நேரலாம். அதற்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று நீங்கள் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள்.




இன்ற உங்கள் ஆற்றலையும் வலிமையையும் உணரும் நாள்.இன்று உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாகச் செய்வீர்கள். நீங்கள் பணிகளை திறம்பட கையாண்டு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.

இன்று இருவரும் மனம் பொருந்தி ஒற்றுமையுடன் கானாப்படுவீர்கள். உங்கள் காதலின் எதிர்காலத்தை பற்றி கலந்தாலோசிப்பீர்கள்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. நீங்கள் எதிர்பாராத வகையிலிருந்து பணம் கிடைக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.




பிரச்சினை அல்லது மனக் குழப்பம் காரணமாக இன்றைய நாளை அனுபவிக்கும் மனநிலை உங்களிடம் இருக்காது. நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் பணிகளை திறம்பட மேற்கொள்வீர்கள். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்காத காரணத்தினால் நீங்கள் ஏமாற்றமடைவீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவதன் மூலம் நல்லுறவை வளர்ப்பீர்கள்.இன்று கணிசமான தொகை சம்பாதித்தாலும் தவிர்க்கமுடியாத செலவுகள் காரணமாக நீங்கள் பணத்தை தக்க வைத்துக்கொள்ள இயலாது. பெரிய அளவிலான ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது. ஆனால் நீங்கள் அசௌகரியமாக உணர்வீர்கள்.




உங்கள் மனதிலிருந்து எதிர்மறை எண்ணங்களை நீக்காவிடில் உங்கள் வளர்ச்சி பாதிக்கும். மதிப்பு மிக்க பொருளை இழக்க வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் சக பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் உங்களுக்கு அசௌகரியமான உணர்வு காணப்படும். இதை அவருக்கு தெளிவாக உரைப்பது சிறந்தது.

இன்று சில நிதி கட்டுப்பாடுகள் காணப்படும். நிதியில் ஸ்திரத்தன்மை காண நீங்கள் உங்கள் செலவுகளை கண்காணிக்க வேண்டும்.




இன்று தடைகளையும் கஷ்டங்களையும் சமாளிக்க வேண்டியிருக்கும். நீங்கள் முயற்சி எடுத்தால் இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக வெற்றியை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

உங்களின் அகந்தைப் போக்கு காரணம்மாக உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். உங்கள் துணையின் உணர்வுகளை கருத்தில் கொண்டு மதிப்பது நல்லது.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. கவனம் தேவை.

தேவையற்ற எண்ணங்கள் காரணமாக குழப்பம் மட்டுமன்றி தலைவலியும் ஏற்படும்.




உங்கள் செயல்களை மேற்கொள்வதில் தடைகள் காணப்படும் ஒரு முடிவை செயலாக்குவதற்கு முன் ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்க வேண்டும். தகவல் பரிமாற்றத்தில் குறைபாடு காணப்படும்.

சக பணியாளர்களுடன் சூடான விவாதங்கள் அல்லது அகந்தை உணர்வுகள் தலை தூக்கும். அத்தகைய சூழ்நிலையை நீங்கள் உருவாக்காமல் இருப்பது சிறந்தது.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

நிதி நிலைமை சாதகமாக இருக்காது. தேவையற்ற செலவுகளால் கவலை ஏற்படும்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. கண்களில் கவனம் செலுத்துவது சிறந்தது.




இன்று இழப்புகள் ஏற்படாத வகையில் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். பொறுமையாக இருக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்களின் சில பணிகள் முடிக்கப்படாமல் இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் திறமையோடு முடிப்பதற்கு திட்டமிடல் அவசியம்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்பட்டு சிறிது வன்மையாக நடந்து கொள்வீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய நடத்தையை தவிர்க்க வேண்டும்.

அதிக பொறுப்புகள் காரணமாக அதிக செலவுகள் காணப்படும். தேவையற்ற செலவுகளை கண்காணிக்க வேண்டும்.




இன்று உங்கள் இலக்குகளில் வெற்றி கிடைக்கும் நாள். உங்களின் நேர்மையான முயற்சி மூலம் உங்களிடம் மறைந்திருக்கும் திறமைகளை நீங்கள் உணரும் நாள். இன்று முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

உங்கள் செயல் திறனில் உங்கள் திறமை வெளிப்படும். நீங்கள் தொடர்ந்து கடின முயற்சி செய்து உங்கள் திறமைகளை மேம்படுத்துவீர்கள்.

உங்கள் இருவரிடையே புரிந்துணர்வு குறைந்து காணப்படும். இதனால் உறவில் திருப்தியான நிலை இருக்காது.

இன்று பணபுழக்கம் அதிகமாக காணப்படும். இந்தப் பணத்தை ஆடம்பரப் பொருள்கள் வாங்கப் பயன்படுத்தலாம்.

உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 20.03.2024




இன்று முன்னேற்றகரமான பலன்கள் இருக்காது. உங்கள் மனக் குழப்பமும் வளர்ச்சியில் தடையை ஏற்படுத்தும். இது உங்களுக்கு பாதகமாக இருக்கும்.

பணியிடத்தில் திருப்திகரமான பலன்கள் காணப்படாது. அதிக வேலை காரணமாக உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபட நேரலாம். எனவே இன்று மகிழ்ச்சியுடன் இருக்க நட்பான உறவை பகிர்ந்து கொள்வது நல்லது.

இன்று பணபுழக்கம் குறைவாக காணப்படும். உங்கள் பொறுப்புகள் அதிகமாக இருக்கும். பணப்பற்றாக்குறை காரணமாக உங்கள் உடனடி தேவைகளை பூர்த்தி செய்ய இயலாது.




இன்று நீங்கள் ஆன்மீகத்தில் ஈடுபடும் சூழல் ஏற்படும். இதனால் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும். சமூக கூட்டங்களில் கலந்து கொள்வீர்கள். புதிய நண்பர்களை உருவாக்கிக் கொள்வீர்கள்.

வெற்றிகரமான பலன்களைக் காண கடினமாக உழைக்க வேண்டும். சில பணிகள் முடிக்க முடியாமல் நிலுவையில் வைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க அத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். கடன் வாங்க நேரலாம்.

மன உளைச்சல் காரணமாக தோள் வலி ஏற்படலாம். தியானப் பயிற்சி மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நம்பிக்கை நிறைந்து காணப்படும் நாள். கடின உழைப்புக்கு வெற்றி கிடைக்கும் நாள். நீங்கள் எடுக்கும் முடிவுகள் நல்ல பலன்களை அளிக்கும்.

பணியிடத்தில் திருப்தியான சூழல் காணப்படும். கடினமான உழைப்பின் மூலம் நற்பெயரும் அதன் மூலம் நன்மதிப்பும் பெறுவீர்கள்.

உங்கள் குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள்.

இன்று நிதிநிலையில் அதிர்ஷ்டம் காணப்படும். உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். அதிர்ஷ்டம் காரணமாக நிதிநிலையில் முன்னேற்றம் காணப்படும். உங்கள் ஆற்றல் காரணமாக இன்று முழுவதும் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். புதிய மனிதர்களின் தொடர்பும் அதனால் நல்ல பயனும் கிடைக்கும். இதனால் உங்கள் தொடர்பு வட்டம் விரிவடையும். வாழ்க்கை உங்களுக்கு கவர்ச்சிகரமாக இருக்கும்.

கூடுதல் பணிகள் காரணமாக இன்று நீங்கள் பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணிகள் அதிகமாக இருக்கும். அவைகளை திறமையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடும் விவாதங்களும் காணப்படும். இரவரும் நட்பு முறையோடு பழகுவீர்கள்.

நிதியைப் பொறுத்தவரை இன்று சுமாரான நாள். பண வரவிற்கும் சேமிப்பிற்கும் அதிர்ஷ்டம் குறைவான நாள்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Experience



S.Thumilan
Group Chairman



CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Karathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co | www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park